நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

2014

தரம் : தொடக்கநிலை
Level : Basic

June 2014

வினாக்கள் : 35
வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள்

**உங்கள் பதில்களை தரப்பட்ட விடைத்தாளில் குறியிடுக.**

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.
(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

For questions 1 to 3, choose the word(s) that best describe the action shown in the picture.
1 முதல் 3 வரையுள்ள வினாக்களுக்கு அருகில் உள்ள படத்தில் நடக்கும் செய்கையைச் சரியாகக் குறிக்கும் சொல்லைத் (சொற்களைத்) தெரிவு செய்க.



1. மாலா ____________ தூக்கி நடனம் ஆடுகிறாள்.

(a) கைகளை

(b) கால்களை

(c) கைகளையும் கால்களையும்

(d) தலையை



2. பெண்கள் கிணற்றில் இருந்து ____________ எடுக்கிறார்கள்.

(a) பால்

(b) மோர்

(c) தண்ணீர்

(d) உணவு



3. சீதா தன் வீட்டு வாசலில் ____________ போடுகிறாள்.

(a) படம்

(b) புள்ளி

(c) கோடு

(e) கோலம்

Read and understand the given Poem and answer the questions 4 to 6.
கீழே தரப்பட்ட பாடலை வாசித்து அதிலிருந்து 4 முதல் 6 வரையான வினாக்களுக்கு விடையளிக்கவும்.



பாப்பா பாட்டு

ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளாயாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

- பாரதியார்

4. இப்பாடலில் பாப்பா என பாரதியார் யாரைக் குறிப்பிடுகிறார்?

(a) மகன்

(b) மகள்

(c) குழந்தைகள்

5. குழந்தைகள் என்ன செய்ய வேண்டும்?

(a) படம் பார்க்க வேண்டும்

(b) சத்தம் போடவேண்டும்

(c) ஓடி விளையாடவேண்டும்

6. வையாதே என்றால் என்ன?

(a) சண்டை போடாதே

(b) கடுஞ்சொல் பேசாதே

(c) வைக்காதே

For questions 7 to 9 give the opposites to the underlined words.
7 முதல் 9 வரையுள்ள வினாக்களில் அடிக்கோடிட்ட சொல்லிற்கு எதிர்க் கருத்துள்ள சொல்லை தெரிவு செய்க.

7. குழந்தைகள் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும்.
   (a) கெதியாக
   (b) விரைவாக
   (c) சோம்பலாக
   (d) துரிதமாக

8. போட்டியில் முயல் தோல்வி அடைந்தது.
   (a) வெற்றி
   (b) அழிவு
   (c) சேதம்
   (d) நஷ்டம்

9 குமரனும் மணியும் நண்பர்கள்.
   (a) சிநேகிதர்கள்
   (b) பகைவர்கள்
   (c) உறவினர்கள்
   (d) பெற்றோர்கள்

For questions 10 to 11 choose the word that has the closest meaning to the underlined word.
10 முதல் 11 வரையுள்ள வினாக்களில் அடிக்கோடிட்ட சொல்லிற்கு ஒத்த கருத்துள்ள சொல்லை தெரிவு செய்க.

10. எனது வீடு அருகில் கோவில் உள்ளது.
   (a) தொலைவில்
   (b) கிட்டத்தில்
   (c) துரத்தில்
   (d) உயரத்தில்

11. அதிகாலையில் எழுவது மிகவும் நல்லது.
   (a) தீயது
   (b) சிறந்து
   (c) கெட்டது
   (d) தீங்கானது

Read the paragraph and answer the questions 12 to 16 from the information given.
கீழ் தரப்பட்ட பந்தியை வாசித்து அதில் தரப்பட்ட தகவல்களைக் கொண்டு 12 இலிருந்து 16 வரையுள்ள வினாக்களுக்கு விடை அளிக்கவும்.

தமிழில் உள்ள அரிய நூல்களுள் திருக்குறள் ஒன்றாகும். அதை எழுதியவர் திருவள்ளுவர். அவர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழ்ப் புலவர். திருக்குறள் இரண்டு அடிகள் கொண்ட பாக்களால் அமைந்தது. திருக்குறளில் ஆயிரத்து முன்னூற்று முப்பது பாக்கள் உள்ளன. இவை அறம், பொருள், இன்பம் என மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதனால் திருக்குறள் "முப்பால்" எனவும் அழைக்கப்படுகிறது.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

இது முதலாவது திருக்குறள். இக்குறள் கடவுள் வாழ்த்தாக அமைகிறது. திருக்குறள் அறநூல், தமிழ் மறை என்றெல்லாம் அழைக்கப்படுகிறது.

12. திருக்குறளை எழுதியவர் யார்?
- (a) புலவர்
- (b) கடவுள்
- (c) திருவள்ளுவர்
- (d) ஆதி பகவன்

13. திருக்குறளில் மொத்தம் எத்தனை பாக்கள் உண்டு?
- (a) ஆயிரம்
- (b) முன்னூறு
- (c) முப்பது
- (d) ஆயிரத்து முன்னூற்று முப்பது

14. ஒரு திருக்குறள் எத்தனை அடிகளைக் கொண்டது?
- (a) இரண்டு
- (b) ஒன்று
- (c) முப்பது
- (d) இருபது

For questions 15 to 17, choose the word that has closest meanining to the underlined word.
15 முதல் 17 வரையுள்ள வினாக்களில் அடிக்கோடிட்ட சொல்லிற்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்க.

15 இராமு முரளியைப் பார்த்து <u>சினம்</u> கொண்டான்.
- (a) பாசம்
- (b) நட்பு
- (c) கோபம்
- (d) வெறுப்பு

16 முழு <u>நிலா</u> அன்று நாம் கடற்கரைக்குச் சென்றோம்.

(a) சந்திரன்
(b) ஞாயிறு
(c) சூரியன்
(d) கேசவன்

17 நான் <u>வேகமாக</u> ஓடினேன்

(a) மெதுவாக
(b) அவசரமாக
(c) விரைவாக
(d) ஆறுதலாக

For questions 18 to 21, choose the word that is opposite in meaning to the underlined word.
18 முதல் 21 வரையுள்ள வினாக்களில் அடிக்கோடிட்ட சொல்லிற்கு எதிர் கருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்க.

18 நாம் வீட்டின் <u>உள்ளே</u> விளையாடினோம்.

(a) மேலே
(b) வெளியே
(c) தூரத்திலே
(d) அண்மையிலே

19 மாணவர் <u>காலையில்</u> எழுந்து படிப்பது சிறந்தது.

(a) மாலையில்
(b) மதியத்தில்
(c) இரவில்
(d) நள்ளிரவில்

20 குளியலறை <u>அசுத்தமாக</u> இருந்தது.

(a) குப்பையாக
(b) தெளிவாக
(c) சுத்தமாக
(d) நிரையாக

21 தண்ணீர் <u>சூடாக</u> இருந்தது.

(a) வெப்பமாக
(b) குளிராக
(c) இனிப்பாக
(d) மென்மையாக

For questions 22 to 26 choose the word to complete the sentence.
22 முதல் 26 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான சொல்லைக் கொண்டு வசனத்தைப் பூர்த்தி செய்க.

22 நேற்று கண்ணனும் வாணியும் தொலைக்காட்சி ___________.

(a) பார்பார்கள்

(b) பார்த்தார்கள்

(c) பார்க்கிறார்கள்

(d) பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்

23 கலைவிழாவில் சாந்தி நாடகம் ___________.

(a) நடித்தாள்

(b) பாடினாள்

(c) ஆடினாள்

(d) இருந்தாள்

24 நாம் தமிழ் வருடப்பிறப்பை ___________ மாதத்தில் கொண்டாடுவோம்.

(a) மாசி

(b) பங்குனி

(c) ஐப்பசி

(d) சித்திரை

25 வீமன் மிகவும் ___________.

(a) பலசாலி

(b) பழசாளி

(c) பழசாலி

(d) பழசாழி

26 அரசனுக்கு மறுபெயர் ___________.

(a) மண்னன்

(b) மன்னன்

(c) மண்ணன்

(d) மந்தன்

For questions 27 to 28 choose the word that is spelt incorrectly in the given sentence.

27 முதல் 28 வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்ட வசனத்தில் எழுத்துப்பிழையான சொல்லைத் தெரிவு செய்க.

27 திருவள்ளுவர் ஈராயிரம் ஆன்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழ்ப் புலவர்.
- (a) திருவள்ளுவர்
- (b) ஈராயிரம்
- (c) ஆன்டுகளுக்கு
- (d) புலவர்

28 நீங்கள் நண்றாக வீணை வாசிக்கிறீர்கள்.
- (a) நீங்கள்
- (b) நண்றாக
- (c) வீணை
- (d) வாசிக்கிறீர்கள்

For question 29 choose the response that combines the sentences in the best way.

29 வசனங்களை சரியான ஒழுங்கில் வரிசைப்படுத்துக.

1. கோவலன் கண்ணகியின் காற்சிலம்புகளில் ஒன்றை விற்கச் சென்றபோது கள்வன் என பொய்க்குற்றம் சாட்டப்பட்டான்.
2. அவளின் கோபத்தால் மன்னன் மடிய மதுரை நகரமே எரிந்தது.
3. தீர விசாரிக்காத பாண்டிய மன்னனின் கட்டளைப்படி கொல்லப்பட்டான்.
4. கண்ணகி தன் கணவன் கோவலன் கள்வன் அல்ல எனப் பாண்டிய அவையில் நிரூபித்தாள்.

- (a) 1, 2, 3, 4
- (b) 1, 3, 4, 2
- (c) 4, 3, 2, 1
- (d) 3, 4, 1, 2

30 திருக்குறள் மூன்று பகுதிகளாக பிர்கப்பட்டுள்ளது. அப்பகுதிகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
- (a) அன்பு, தூது, நட்பு
- (b) அறம், பொருள், இன்பம்
- (c) கேள்வி, துறவு, தவம்
- (d) மானம், சூது, ஈகை

Questions 31 to 35, write the correct answer (Colour) in the asnwer paper.
வினாக்கள் 31-35 - சரியான நிறத்தை விடைத்தாளில் எழுதுக.

31 பால் என்ன நிறம்?




32 இலை என்ன நிறம்?



33 இந்த வட்டம் என்ன நிறம்?



34 இந்தப் பூவின் நிறம் என்ன?



35 தலைமுடி என்ன நிறம்?



நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

2014